செ.வெ.எண்: 418/2016 நாள்: 04.07.2016

# பத்திரிகை செய்தி

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுபான்மையின மக்கள் தங்கள் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் சிறுவணிகக்கடன், தனிநபர்கடன் மற்றும் கல்வி கடன்களை மிக குறைந்த வட்டிவிகிதத்தில் வழங்கி வருகிறது.

**கடனுதவி பெறுவதற்கான தகுதிகள்:**

1. சிறுபான்மையினர் இனத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் **ரூ.98,000/-** மற்றும் நகர்புறமாயின் **ரூ.1,20,000/-** க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
3. விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவாராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்
5. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

மேற்படி கடன் பெறுவதற்கான விண்ணப்பத்தினை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்/ ˙ தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலிருந்து பெற்று சாதி, வருமானம், இருப்பிடச்சான்றிதழ், குடும்ப அட்டை நகல், கல்வி கடனை பொறுத்தவரை கல்லூரி சேர்க்கைக்கான ஒதுக்கீடு ஆணை மற்றும் Bonafide Certificate போன்ற ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் சமர்ப்பிக்கும் படி தெரிவிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்) சஜ்ஜன்சிங் ரா.சவான்
மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

/உண்மை நகல் - உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.